<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

<u>OS.NO.60/2020</u> தேதி.09.01.2025

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 09.01.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணவேணி |
| க/பெ. | : | ஜானகிராமன் |
| வயது | : | 50/2025 |
| தொழில் | : | இல்லத்தரசி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | கல்லூர் |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

<u>முதல் விசாரணை:–</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். வாதி என்னுடைய சகோதரி ஆவார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். The certified copy of the registered Sale Deed dated 05.02.1976 வா.த.சா.ஆ.1 ஆகும். 10.10.2022 தேதியிட்ட வள்ளியம்மாள் என்பரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் வா.த.சா.ஆ.2 ஆகும். Copy of the legal notice dated 03.03.2020 to the defendants வா.த.சா.ஆ.3 ஆகும். Postal Receipt வா.த.சா.ஆ.4 ஆகும்.